YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ளநண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

உதயன்

விலை: ரூ. 1-25

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ளநண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

கூடார 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 29 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 13 (12.05.1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 141

செஞ்சிலுவைச் சங்க மத்தியஸ்தத்துடனேயே பேச்சு!

யாழ்ப்பாணம், மே 12
யாழ் பெரியாஸ்பத்திரி தொடர்பான பேச்சுவார்த்தைகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்தியஸ்தத்துடனேயே நடைபெறவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்டவாறு நிபந்தனை விதித்தனர்.

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு:-

யாழ் போதனா வைத்தியசாலை மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வந்த சிறிலங்கா அரசு அதனை முழுமூச்சாக கொடூர சட்டங்களைச் செய்ய முடிவுசெய்தது.

எமது வரலாற்றில் யாழ் வைத்தியசாலை எல்லைக்கு உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து நாம் ஒருபோதும் வெளியேறி இராணுவ முகாம் மீது தாக்குதல்களை மேற்கொண்டது கிடையாது.

இருந்த போதிலும் ஆஸ்பத்திரி மீது நாங்கள் நடத்திய அரசு, அதன் உச்சக்கட்டமாக அதனை முற்றாக உத்தரவையும் பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்தும் இடம் பெற்ற மக்கள் போராட்டங்களும், சர்வதேச நெருக்கடிகளும் அரசின் கருத்தரவை 'மறுபரிசீலனை செய்ய வைத்தன' எனினும் எம்முடன் பேசுகை நிலைக்கும் தள்ளியது.

இறைத் தொடர்ந்து நாம் பேச்சுவார்த்தை தொடர்பாக ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த சமயம், யாழ் நகரப்புறத்தில் அப்பாவிகளின் குடியிருப்புக்களின் மீது பொம்மர் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மக்களின் கடந்த கால வரலாறு முதல் இன்றுவரை சிறிலங்கா அரசு எதுவித நம்பிக்கையுமற்ற விதமாகவும் செயற்படமுடியவில்லை.

இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த சமயம், யாழ் ஆஸ்பத்திரியைச் சுற்றி பொம்மர் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

எனவே இவ்வரலாறுகளை ஆஸ்பத்திரி குறித்த பேச்சுவார்த்தைக்கு, மத்தியஸ்தம் வகித்து இப்பேச்சுவார்த்தையையும், அதன் 'தீர்வுகளையும்' ஒழுங்காக நடைமுறைப்படுத்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்பதுடன் வவுனியா பொது வைத்தியசாலை பீடாதிபதியும், வன. பிதா. பொன்னையா தேவானந்த போன்ற மதப்பிரதிநிதிகளும், அரசு வைத்தியர் அதிகாரிகள் சங்கமும் செயலாளரும், இம் மத்தியஸ்தத்திற் இடம் பெற்று பேச்சு வார்த்தைத் தீர்வுகள், ஒழுங்காகவும், நேர்மையான தாகவும் நடைமுறைப் படுத்தமுடியாமல் பட்சத்தில் நாம் பேச்சுவார்த்

(4 ஆம் பக்கம் பார்க்க)

● பிரிட்டிஷ் நாடாளுமன்றம் கலைக்கப்படுகிறது

லண்டன், மே 12
பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நேற்றுக்கலைக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் பொதுத் தேர்தல் எதிர்வரும் மாதம் 11ஆம் திகதி நடத்தப்படும்--

பிரதமர் மார்கரட் தாட்சர் நேற்றுக் காலை தனது நம்பிக்கைக்குரிய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுக்களில் பின்னர் மகாராணியாரை பக்கிங்ஹாம் மாளிகையில் சந்தித்து, நாடாளு

(4 ஆம் பக்கம் பார்க்க)

முத்தி மூளி

பதினேழு நாளாய் வந்த வாத்துப் பாத்து நேற்றைக்கு வொரிஞ்ச துள்ளிப்போட்டுப் போயிட்டிளம் வாத்தியே .:! இந்தியா சொன்னுல் என்ன யார் சொன்னுல் என்ன இடமல்லர் வேலிக்கு எடுத்த குத்தலை விடமாட்டுனமோ. !

மரணமானோர்

யாழ்ப்பாணம், மே 12
நேற்றைய பொம்மர் தாக்குதலில் மரணமானோர் விபரம் வருமாறு:

எஸ். செல்லையா (வயது 65) கொழும்புத்துறை.

ஏ. சிவா, (வயது 19) கல்லிமம்மை (வயது 40) வட்டுக்கோட்டை.

எஸ் எம். எம். முகைதீன் (வயது 40) சேவன் லண்னை வீதி.

இவர் விமானக்குண்டு வீச்சில் அதிர்ச்சியால் மரணமானார்.

கதியமடைந்தோர்

யாழ்ப்பாணம், மே 12
யாழ்நகரில் நேற்று குண்டுவீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதல்களில் காயம் அடைந்தோர் விபரம்வருமாறு:-

எம். இராசாத்தி (45 வயது) யாழ்ப்பாணம், பி. மைலாதேவி (38 வயது) வட்டுக்கோட்டை குமார் (16 வயது) யாழ்ப்பாணம், கே. கோபால

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஞாயிறு இரவு

போராளிகளைப் பேச்சுக்கு அழைத்த கையோடு

யாழ் நகரில் பொம்மர்கள் திடீரெனக் குண்டு மாரி!

சம வேளையில் அகோர ஹெலி, ஷெல் தாக்குதல்கள் 5 பேர் பலி; உடைமைகள் சேதம்

யாழ்ப்பாணம், மே. 12

ஆஸ்பத்திரிப் பகுதியை யுத்தத் தவிர்ப்பு அமைதிப் பிரதேசமாக்குவது சம்பந்தமாகப் போராளிகளைப் பேச்சுக்கு அழைத்த கையோடு - மூன்று நாட்களில் -

நேற்று மாலை, அரசாங்க பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள் யாழ்ப்பாண நகரின் பல பகுதிகளிலும் திடீரெனச் சடுதியாகச் சரியாக அரைமணி நேரம் ஆவேசத்தனமாகக் குண்டுமாரி பொழிந்தன. நெருப்புக் கோளங்களாகக் குண்டுகளைச் சிறித்தள்ளின-

குண்டு வீச்சு நடத்தப்பட்ட அதே வேளையில் - சம வேளையில் நாலா பக்கமும் ஹெலித் தாக்குதலும் ஷெல் தாக்குதலும் அகோரமாக மேற்கொள்ளப்பட்டன.

மும்முனைத் தாக்குதல்களால் மக்கள் பதற்றம் அடைந்து பதுங்கு குழிகளுக்குள் ஒளித்துக் கொண்டனர்.

எனினும் பொம்மர் தாக்குதலில் ஒரு பெண் உட்பட ஐவர் மரணமானார்கள். அவர்களில் ஒருவர் போராளியாவார், மானிப்பாய் வீதியில் சாப்பாட்டுக் கடை ஒன்று முற்றாக எரிந்து சாம்பரானது. பல வீடுகளும் வாகனங்களும் சேதமடைந்தன.

கடந்த மாதம் 24ஆம் திகதி மார்க்கெட் வீதி, ஐந்தாம் குறுக்குத் தெரு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுக்குப் பிறகு நகரில் நேற்று மீண்டும் திடீர்க் குண்டு வீச்சு இடம்பெற்றது;

நேற்று மாலை சரியாக 4-10 மணி அளவில் நகரின் கேலாக் பறந்து வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் திடீர் தாக்குதல்களை மேற்கொண்டன.

மானிப்பாய் வீதியில் மானிப்பாய் வீதியில் சமுதாடு அலுவலகத்தருகும் வைத்திலிங்கரா கல்லூரிக்கும் இடையில் உள்ள இரண்டு வீடுகள் மீது குண்டுகள் விழுந்ததன் காரணமாக வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் ஒரு வீட்டில் இருந்த ஒருவர் பலியானார்.

அதே வீதியில் விழுந்த வெடித்த பல குண்டுகள் காரணமான கூவித் தொழில் செய்யும் பெண் உட்பட மூன்று பேர் பலியானார்கள்.

மானிப்பாய் வீதியில் உள்ள முருகு விலாஸ் என்ற சாப்பாட்டுக் கடை தீப்பற்றி எரிந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

நிரம்புலப்பிரட்டிய

மக்கள் வங்கியில் ரூ. $1\frac{1}{4}$ லட்சம் அபகரிப்பு

கொழும்பு, மே 12
திரம்புலப்பிட்டிய மக்கள் வங்கி இன்று நேற்றுக் காலை கொள்ளை இடப்பட்டது.

பொலீஸ் சீருடை அணிந்த எட்டு ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் இக் கொள்ளையை நடத்தினர்.

இதில் ஒருவர் உயிர் இழந்தார். வங்கி முகாமையாளர் உட்பட 6 பேர் காயமடைந்தனர்.

முகாமையாளர் ஆபத்தான நிலையில் இருக்கிறார்.

வங்கியிலிருந்த 1 லட்சத்து 81 ஆயிரம் ரூபா இளைஞர்களால் கொள்ளை இடப்பட்டது

மஹரஸ் காவல் ஒன்றில் வந்தவர்களே

(4 ஆம் பக்கம் பார்க்க

யாழ் ஆஸ்பத்திரியில்

50 க்கு மேற்பட்ட நோயாளிகள் நேற்று சேர்க்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 12
யாழ் ஆஸ்பத்திரியில் நேற்று 50 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்காக வார்ட்டுகளில் சேர்க்கப்பட்டனர்.

கடந்த ஒரு வார காலமாக பதற்ற நிலையில் காணப்பட்ட யாழ் ஆஸ்பத்திரி நேற்று ஊழியர்கள் வருகையாலும், நோயாளர் வருகையாலும் சுறுசுறுப்படைந்த காணப்பட்டது

வெளிநோயாளர்பிரிவிலும் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் சென்றனர்.

இவிலிக்குளம் நேற்று நடைபெற்றன.

யாழ் டீஸ் நிலையத்திலும் கடைகள் பல திறக்

(4ஆம் பக்கம் பார்க்க)

சங்கானை சண்டிலிப்பாய் பகுதிகளிலும் நேற்று ஹெலித்தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 11
சங்கானை, சண்டிலிப்பாய் பகுதிகளில் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் மேற்கொண்டதில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர்

வானம் ஒன்றை நோக்கி தாக்குதல் நடத்துவதாகவே இச்சம்பவம் இடம்பெற்றது.

நேற்று சோப்பாய் வைரவர் பாலத்தில் சென்றுகொண்டிருந்த வட பிராந்திய போக்குவரத்து சபையை மறிமீதும் ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியது.

சோப்பாய் வைரவர் பாலத்தில் அடிக்கடி நடைபெறும் ஹெலிக் கொப்டர் தாக்குதலினால் யாழ்ப்பாணத்துக்கு வரவிருந்த பொதுமக்கள் இருண்டு பிடிப்பே தமது போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். (இ-10)

மத்திய கல்லூரி - வேம்படி வேறு பாடசாலைகளுக்கு மாற்றுவதுகுறித்து ஆலோசனை

யாழ்ப்பாணம், மே 12
யாழ் நகரில் உள்ள இரண்டு பாடசாலைகளை வேறு இரு பாடசாலைகளில் சட்டடங்களில் மாலை நேரப் பாடசாலைகளாக நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகின்றது:

யாழ் மத்திய கல்லூரியை கணகரத்தினம் மத்தியமகாவித்தியாலயத்திலும் வேம்படி மகளிர் கல்லூரியை யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நடத்துவது ஆலோசனை கருப்பட்டுள்ளது.

அந்தந்த கல்லூரிகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் இவ்வாரம் கூடி இது பற்றி ஆராயவுள்ளன.

இவ்வாறு யாழ்மாவட்டக் கல்விப் பணிப்பாளர் எம். எம். மக்கீன் தெரிவித்தார்.

இந்த இரு பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் கூட்டங்களிலும் கல்லூரிகள் தொடர்ந்து அதே இடத்தில் இயங்குவதா அல்லது அவற்றை வேறு இடத்திற்கு மாற்றுவதா என்று இறுதி முடிவு எடுக்கப்படும். (இ-7)

மேலும் இரு பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன

பதற்றம் காரணமாக ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் கொழும்புப் பல்கலைக் கழகமும் காலவரையறை இன்றி மூடப்பட்டன

விடுதியில் உள்ள மாணவர்கள் உடனடியாக வெளியேறும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலியில் விழுந்த ஷெல்களால் மூவர் காயம்

வீடுகள், தேவாலயம் சேதம்

— அச்சுவேலிச் செய்தியாளர் ஆதவன் —

அச்சுவேலி மே 11
அச்சுவேலிப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஏழு ஷெல்கள் விழுந்ததனால் மூவர் படுகாயமடைந்தனர்.

பல வீடுகள் சேதமடைந்தன.

இந்த ஷெல்களில் ஒன்று அச்சுவேலி கொலவிலில் உள்ள சோமகந்தரம் என்பவரது வீட்டில் விழுந்து வீட்டை முற்றாகச் சேதப்படுத்தியது. வீட்டுக் படுத்திருந்த சோமகந்தரத்தின் மாமனார் பேரின்பவதியின் (வயது 88) காலில் காயம் ஏற்பட்டது.

தங்கம் வைத்திய சாலையில் விழுந்த மற்றொரு ஷெல்லினால் வைத்தியசாலை கட்டடம் பலத்த பாதிப்புக்கு உள்ளானதுடன் மலசல

(4 ஆம் பக்கம் பார்க்க)

மலநேரம்

18-05-1987
செவ்வாய்க்கிழமை

மலநேரம்:-
10-24 முதல் 11-54வரை
நாளாவரம்:-
2-54 முதல் 4-24 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுவான நாளிகை ஜனதி

குடாநாட்டைக் முடிவுடனேயே கைப்பற்றும் அரசு இன்னும் இருக்கிறதாம்

செஞ்சி, மே. 11
யாழ் குடாநாட்டை இராணுவரீதியில் கைப்பற்றக் முடிவுடன் தான் இலங்கை அரசு இன்னமும் இருக்கின்றது.

ஆனால் பொதுமக்களுக்கு உயிரிழப்புக்கள் ஏற்படாமல் எப்படிக் கைப்பற்றுவது என்பதால் பிரச்சினையாக இருக்கிறது.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா மேற்கொண்டவாறு செஞ்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மாகாண சபைகளை நிறுவுவதற்கான 'நகல் சட்டம் தயாராகி விட்டது 1986 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கொழும்பில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் ஆடிப்படையில் இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது

தமிழர் பகுதிகளைப் பிரித்துக் கொடுக்க அரசு தயாராக இல்லை.

ஆகவேதான் 19 யோசனைகளில் அரசு இன்னமும் உறுதியாக இருக்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பிந்தியசெய்தி

பஞ்சாப் மாநில அரசு கலைப்பு!

லண்டன், மே 11
பாரதூரமான தலைமையிலான பஞ்சாப் மாநில அரசைக் கலைப்பது என இந்திய மத்திய அரசின் அமைச்சரவை நேற்று முடிவு செய்தது

பஞ்சாப் மாநிலம் மத்திய அரசின் நேரடி ஆளுகைக்கு உட்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

(முதலாவது செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★விளம்பரங்கள்★
★★★★★★★★★★

விற்பனைக்கு

38/7028 இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள VAN உடன் விற்பனைக்கு உள்ளது. தொடர்புகொள்க: 5/1 1-ஆம் ஒழுங்கை, நல்லூர் மோட்டை, யாழ்ப்பாணம். or 69 G. 4th Cross Street, Jaffna. (C)

உணவு முத்திரைகள் வரவில்லை

87 ஆயிரம் மீனவர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மே 12
யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள மீனவர்களுக்கான உணவு முத்திரைகள் இன்னும் வந்து சேரவில்லை. இதனால் 15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 87 ஆயிரம் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ் செயலக உயர் அதிகாரி ஒருவர் இதை நேற்றுத் தெரிவித்தார்.

கடந்த மாதங்களுக்கு ஒரு தடவை மீனவர் உணவு முத்திரைகள் வருவது வழக்கம்.

ஏப்பிரல் மாதம் வந்திருக்கவேண்டிய மீனவர் உணவு முத்திரைகள் இன்னும் வந்துசேரவில்லை.

யாழ் சமூக சேவைத் திணைக்களம் இதுபற்றிய தகவல்களை கொழும்புக்கு ஏற்கனவே அனுப்பியுள்ளது.

சென்ற தடவை மீனவர் உணவு முத்திரைகள் மலாலி முகாமிற்கு வினாக்மூலம் கொண்டு வரப்பட்டு உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவராக் பொறுப்பேற்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

இவ்வாறு அவ்வதிகாரி தெரிவித்தார். (இ-எ)

பார்வையாளர்களாக பங்காளராக மக்கள் மாற வேண்டும்

கரவெட்டி, மே 12
ஈ.தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்போடு முன்னெடுத்துச் செல்லப்படும் இக்கால கட்டத்தில் மக்கள் பார்வையாளராக இருக்காது போராட்டத்தில் பங்காளராக மாறவேண்டும்.

நெல்லியடி தமிழீழ விடுதலைப் புலிகளின் வானொலிப் பொறுப்பாளர் திரு. செல்வதுரை, கரவெட்டி செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் மக்கள் மத்தியில் ஆற்றிய உரையில் கூறினார்.

இருக்காது

நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

செஞ்சோலை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் விளையாட்டுக் கழகத்தினர் செல்வன் ந. சிவலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. செல்வதுரை மேலும் உரைநிகழ்த்துகையில்; தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் உக்கிரமடைந்திருக்கும்இக்வேளையில்மீது பொறுமை கொண்டவர்கள் விண் வந்திடுவரப்பியும் விண்ணைக் கவிக் கடுபட்டும் எடுக்கின்றனர் என்றார்.

கழப்புரட்சி அமைப்பு நெல்லியடி பேச்சாளர் தோழர் தான் உரை நிகழ்த்துகையில் விடுதலை வேட்கையை மலிந்த இக்கிராமத்தில் ஆரம்ப காலத்தில் சாதிவெறிக் கெதிராக போராடிய தோழர்களின் நாமத்தை விட்டு இவ்விளையாட்டுப் போட்டி அமையாது மிகவும் நெப்பான ஒன்றாகும் என்றார். (இ-70)

ஜிஹாத் படையிடம் சிக்கிய பொலீஸார்

காத்தான்குடி, மே 12
முஸ்லிம் ரோமமொழியில் பெண்களைக் கேலி செய்த பொலீஸ்காரர் இருவருக்கு ஜிஹாத் படையினர் சாட்டை கொடுத்து பொலீஸில் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் அண்மையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றில் நடைபெற்றது.

அப்பகுதியிலுள்ள பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலீஸார் தான் ஜிஹாத் படையினரிடம் சிக்கியவர்களாவர்.

கிளிக் உடையில் நின்ற இவர்களை பொதுமக்கள் ஜிஹாத் படையினரிடம் ஒப்படைத்தனர்.

சாட்டை கொடுத்த பின்புதான் பொலீஸில் இருவரும் ஒப்படைக்கப்பட்டனர்.

இழக்கில் ஜிஹாத் படை அரச குதாவுடன் இயங்குவது குறிப்பிடத்தக்கது (இ-81)

கலவியைத் தொடர முடியாத நிலையில் மாணவர்

பிரசைகள் குழு விவாதித்தது

கல்முனை, மே 11
யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாதுள்ள சூழ்நிலை குறித்து கல்முனை பிரசைகள் குழுவின் செயற்குழுத் தலைவர் திரு. தி. மாணிக்வாசகர் தலைமையில் கூடியபோது மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். வலத்தியசாலை பணிப்பாளர் திரு. நச்சிநார்க்கினியனிடம் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தும் தீர்மானமும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் சொல்லிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் மிகச் சிறந்த ஒரே நிறுவனமான யாழ். போதனா வைத்தியசாலையை மூடும் யோசனையை அரசு கைவிட வேண்டும் என்கிற கோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அம்பேத்கார் சனசமூக நிலைய பொதுக்கூட்டம்

கல்முனை, மே 11
கல்முனை அம்பேத்கார் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் கருத்தரங்கும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நிலையத் தலைவர் திரு. சமா. புஷ்பராஜன் தலைமையில் நடைபெறுகிறது.

இன்றுள்ள சூழ்நிலையில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடலும் தோன்றிக் கருத்தரங்குகளின் பயன் பற்றிய கருத்தரங்கும் இடம்பெறும். (இ-81)

சாவகச்சேரி - வவுனியா இ. போ. ச. பஸ் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை

சாவகச்சேரி, மே 12
சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து தினமும் அதிகாலையில் வவுனியாவிற்கான பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்து நடத்தும்படி தென்னாட்டுப் பஸ் பிரயாணிகள் சங்கம் வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவருக்கு மனுச் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சங்கப் பிரதிநிதிகள் குழு இது தொடர்பாக வடபிராந்தியத் தலைவரைச் சந்தித்து உரையாடினர்.

வவுனியா செல்லும் பிரயாணிகள் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் யாழ்ப்பாணம் இருந்து வரும் பஸ்களில் இடம் பிடிக்கமுடியாது கஷ்ட முறுவதை சந்திப்பில் விளக்கினர்.

ஒரு பஸ் சேவையை விரைவில் நடத்த நடவடிக்கை எடுப்பதாக தலைவர் உறுதி அளித்துள்ளதாக சங்கப் பிரமுகர்கள் தெரிவித்தனர். (இ-81)

முதலுதவி சிகிச்சை நிலையம்

திருநெல்வேலி, மே 12
திருநெல்வேலி பொது மக்கள் பாதுகாப்புச் சபையினரால் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் முதலுதவி சிகிச்சைநிலையம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிஅளவில் வைத்திய கலாநிதி டி. இராமதாஸ் இந்த நிலையத்தைத் திறந்து வைத்தார்.

முதலுதவிப் பயிற்சி விளக்கம் பொதுமக்களுக்குச் செய்முறை மூலம் விளக்கப்பட்டது. (இ-143)

கிராம அபிவிருத்தி சங்கங்களின் செயற்பாடுகள் இன்றைய நிலையில் அவசியம்

மண்டைதீவு, மே 11
கிராம அபிவிருத்தித் துறையில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் செயற்பாடுகள் அவசியம் தேவைப்படுகின்றன. நாடுகிற இன்றைய சூழ்நிலையிலும் கிராம முன்னேற்றம் குறித்து சங்கங்கள் தங்கள் செயல்பாடுகளை துரிதகதியில் செய்துமுடிக்க முன்வரவேண்டும்.

மண்டைதீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசிய தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சடாட்சரசர்மா முதாஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு. க. ஜெயபுனிதன் தலைமையில் சங்க மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு சடாட்சரசர்மா முதாஸ் அங்கு தொடர்ந்து பேசுகையில் நமது கிராம அபிவிருத்தியை எம்மால் இன்றையதினம் சிரமதானப் பணிகள் மூலம் அபிவிருத்தி செய்ய முன்னுரவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-87)

மட்டக்களப்பில் ஆயுதப் படையினர் உஷார் நிலையில்

மட்டக்களப்பு, மே 12
மட்டக்களப்பு நகரிலும் நகர் சுற்றுவட்டத்திலும் போராளிகள் நடமாட்டம் குறித்து ஆயுதப்படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நகரிலும் நகர் சுற்றுவட்டத்திலும் கடந்த சில வாரங்களாக ஒப்பந்தமிட்ட போராளிகளின் தாக்குதல் பொலீஸ் நிலைய சிரேஷ்ட விசாரணையாளர் மீதும் ஆரம்பமாகியுள்ள தாக ஆயுதப் படையினர் கருதுகின்றனர்.

இப்பகுதியில் போராளிகள் நடமாட்டம் குறித்து ஆவலாதமாக இருக்கும் படையினர் நகரிலும் நகர் சுற்றுவட்டத்திலும் திடீரென சுற்றி வளைப்பை மேற்கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு சுற்றி வளைப்பிலும் 400-600 பேர்வரை கலந்து, ஊரவி முகாம்களுக்குக் கொண்டு செல்லப்படுகிறார்கள்.

குடாமில் முகமூடி மனிதர்கள் முன்னிலையில் ஆவர்கள் ஆஜர் செய்யப்படுகிறார்கள்.

படையினரின்இச்சுற்றி வளைப்புக் காரணமாக அரச ஊழியர்கள், மாணவர்கள், வியாபாரிகள், தொழிலாளிகள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிரமுகர்குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. (இ-81)

இம்முறை 8 பந்தல்கள் மட்டுமே

கொழும்பு, மே 12
இம்முறை கொழும்பு மாநகரில் எட்டு வெசாக் பந்தல்களே அமைக்கப் பட்டிருக்கும்.

வெசாக் காலத்தில் கொழும்பு மாநகரில் குவிக்கப்பட்டிருக்கும் 1,500 பொலீஸார் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தப்படுவர். (இ-எ)

2 இராணுவ சென்றிகள் மூடப்பட்டன

கருத்திரபுரம், மே 12
இவிநொச்சிப் பகுதியிலுள்ள இரண்டு இராணுவ சென்றிகள் மூடப்பட்டுவிட்டன.

இந்த இராணுவ சென்றிகள் இரண்டும் கடமையாற்றிய இராணுவத்தினர் கடந்த சில தினங்களுக்கு முன் தங்கள் மறையாகிவிட்டனராம். இதனாலேயே இந்த இரண்டு சென்றிகளும் மூடப்பட்டுவிட்டன என்று கூறப்படுகிறது.

இவிநொச்சி சந்தை வளாகம் போதிலுக்கு முன்புறமாக உள்ளதாகவே கடமையில் இருந்த ஒரு சென்றியும், சாலைப் போக்குச் சந்தியில் இருந்த ஒரு சென்றியுமே மூடப்பட்டுள்ளன. (இ-ரி)

லயன்ஸ் அன்பளிப்பு

கொழுமதம், மே 11
ஸ்லெக்ரேனிக் இரத்தப் பரிசோதனைக் குழு ஒன்று சாவகச்சேரி 'லயன்ஸ்' கழகத்தினரால் சாவகச்சேரி வைத்தியசாலை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரத்திடம் வழங்கப்பட்டது.

சபை ஊழியனுக்கு பிரிவுபசாரம்

புங்குடுதீவு, மே 11
கடந்த நாற்பது ஆண்டுகளாக புங்குடுதீவு தெற்கு வித்திய நிருவாகசபையில் ஊழியனாக கடமை யாற்றி ஓய்வுபெற்ற திரு. செ. இராஜ்குமாருக்கு பிரிவுபசார விழாவுங்கூடுதலும் நடைபெற்றது.

சபை மக்களால் நடத்தப்பட்ட இவ்விழாவுக்கு திரு. வே. சி. சோதரர் தலைமை வகித்தார்.

திரு வே. வே. பொன்னையா, சகோதரர் எஸ். குலசிங்கம், திரு. பி. சச்சிதானந்தம் திரு. ஆ. ரத்தினதேவராசா, செல்வி சந்தியகுமாரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். (இ-எ-131)

UNIVERSITY OF JAFFNA
Tender Notice

Tenders are invited from Contractors registered for Rs 50,000/- or over for civil works with University of Jaffna or Department of Buildings for the construction of 'Proposed semi permanent cooking area for the canteen'

Tender forms and drawings may be obtained from Works Engineer, University of Jaffna on payment of Rs. 100/- until 11-05-87.

Tenders should be received on or before 19-05-87 at 10-00 a. m.

REGISTRAR
University of Jaffna.
(1846)

மக்கள் முகம்

சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு

வட்டுக்கோட்டை, மே 12
சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு நிர்வாகக் குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்:- திரு பொ. சாம்பசிவம், இணைச் செயலாளர்கள்:-திரு க. உபேந்திரன், திரு. எம். எனேஷ் பொருளாளர்:- திரு. மு. சுப்பிரமணியம் உறுப்பினர்:- திரு க. விரசிங்கம்

நிர்வாக உறுப்பினர்கள்:- திரு க. அருந்தவராசா, திரு மு. முருகேசு, செ. சோமசுந்தரேஸ்வரன், திரு நா. சிறீராம், திரு க. ச. சந்தானசாமி, திரு நா. நாவலிங்கம், திருமதி. சோதிநாயகி, திரு. பொ. கனேசு, திரு க. நிரவியம், திரு மா. ஆனந்தன்.

ஆலோசகர்கள்:- சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. த. வைத்திலிங்கம், சங்கானை பட்டினசபை அதிகாரியாகியப்பட்ட உத்தியோகத்தர் திரு நா. தங்கராசா தமிழ் மாவிர் பேரவை திரு. முருகையா, விசேட சேவை உத்தியோகத்தர் திரு வி. ரி. கதிர்காமநாதன், வலிதெக்கை உத்தியோகத்தர் திரு ஜி. தெய்வநாதன், திரு மசேவையாளர் திரு. ச. ராஜபாலன் வலிர்த் செய்கைத்தியோகத்தர் சிறீமுருகேன், திரு. த. தமிழ்ராசா, வலிர்த் செய்கை உத்தியோகத்தர் திரு எஸ் சிவநாதன். (இ-161)

விளையாட்டரங்கு

புத்தூர் கலைமதி சம்பியன்

மானிப்பாய், மே 12
ஜெனுடெல்ஸ் நிறுவனத்தின் ஆதரவில் இணுவில் கலைஒளி மன்றம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடர் போட்டியில் இறுதிநாள் நிகழ்ச்சியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இச்சுற்றுப் போட்டியில் யாழ் மாவட்டத்தில் பல பகுதிகளிலிருந்தும் 48 குழுக்கள் பங்கு பற்றின.

போட்டிகளின் முடிவில் கலைமதி விளையாட்டுக்கழகம் 48 புள்ளிகளையும் பெற்றன.

புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

உடுப்பிட்டி இளைஞர் விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தைப் பெற்றது.

போட்டிகளுக்கு திரு. எஸ். சண்முகநாதன் நடுவராகக் கடமையாற்றினார்.

இணுவில் கலைஒளி மன்றத்தினர் தொடர்ந்து எதிர்வரும் ஜூன் மாதத்தில் மெல்பேர்ன் சிறிக்கெட் சற்றுப்போட்டி ஒன்றை நடத்த உள்ளனர். (இ-90)

சூராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழக ஏழாவது ஆண்டுப்போட்டிகள்

கல்முனை, மே 18
சூராவத்தை குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தினரின் ஏழாவது ஆண்டு மெய்வல்லுனர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கழக விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் திரு ஜே. எல். மரியதாஸ் தலைமையில் போட்டி நடைபெறும்.

கல்முனை பல்கலைக்கழக அருட்திரு பேராசிரியர் அடிகளார் மங்கள விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்து வைப்பார்.

விளையாட்டு விழாவில் முதன்மை விருந்தினராக கல்முனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு சி. குமரவேல் கலந்து சிறப்பிப்பார்.

குழந்தைகள் விளையாட்டுக் கழகத்தினர் 1981-ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் குழந்தைகளுக்கான விளையாட்டுப் போட்டிகளை பிரமாண்டமான முறையில் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (இ-87)

அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 1914 - 01 - 14
மறைவு: 1987 - 04 - 14

திருமதி பத்மாவதி சச்சிதானந்தம்

திருமதி பத்மாவதி சச்சிதானந்தம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 1987-05-14 ஆம் திகதி புதன்கிழமை, வல்வெட்டித்துறையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று மறணியில் அஸ்தி கரைக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் மாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இவ்வண்ணம்
(1808) அன்னாரது குடும்பத்தினர்

1ஆம் வருட நினைவஞ்சலி

இராசம்மா துரைசாமி
திருநெல்வேலி.
தோற்றம்: 02 - 06 - 1928 மறைவு: 12 - 05 - 1986
பிரிவால் துயருறும்
கணவன், உறவினர், மக்கள் ரஜனி, ராமினி, ரமினி, மருமக்கள். நிர்மலன், கலா, சண்முகானந்தகுமார், பேரப் பிள்ளைகள் திவாகர், சுகன்யா. (1316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஒரு பொழுதும் தன்மானம் மாறாத பொருள் ஒன்று உண்டு. நாம் செய்யும் நற்செயலே அது

— மேலிடர்லிங்

உதயன்

இலங்கை - இந்தியாவுக்கு அதிகாலை

இல.15,1 குமரன்முகிலை தொலைபேசி: 24805
விலை: ரூ.1.00 22075
வாரிதியான 12-05-1987 த.கோ.இல. 88

ஆஸ்பத்திரிப் பேச்சு

யாழ்ப்பாணக் ஆஸ்பத்திரி மூடப்படுமா? இல்லையா? இரண்டுக்குமே நிர்க்கமான பதில் கூற முடியாத நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுக்கிறது.

இலங்கையில் மிகப்பெரிய ஆஸ்பத்திரிகளில் ஒன்றாக விளங்கும் யாழ் ஆஸ்பத்திரியை இம்மாதம் எட்டாம் திகதியுடன் மூடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. அதற்கு மக்கள் எதிர்ப்பு மனிதாபிமானமுள்ள மக்கள் ஆஸ்பத்திரியை மூடுவதால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை எடுத்துக்கூறி உத்தரவை ரத்துச் செய்விக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் இருந்து விசேட குழு ஒன்றும் கொழும்பு விரைந்தது.

ஆஸ்பத்திரியை மூடுவதை ஒத்திவைப்பதாகவும், தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு முன்னேடியாக ஆஸ்பத்திரிப் பகுதியை ஆமைப் பிரதேசமாகப் பேராதனியின் இணைத்தைப் பெற்றுத்தருமாறும் அரசாங்கத்திடம் சார்பில் தூதுக்குழுவுடன் பேசிய அமைச்சர் அத்துலத் தெரிவித்தார். பேராதனியின் இணைத்தைப் பெறுவதற்கு வெகு நாள் மான நாளை புதன்கிழமை வரை அவகாசமும் வழங்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த இரண்டு சிப்பாய்களை விடுவிப்பது சம்பந்தமான விவகாரத்தில் புலிகளுடன் நெருங்கிப் பழகி ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் நடத்தியவர் கப்டன் கொத்தலாவல. ஆஸ்பத்திரி தொடர்பாகப் பேசுவதற்கும் அவரையே அரசு தனது விசேட பிரதிநிதியாக அனுப்பி வைத்திருக்கிறது.

கப்டன் கொத்தலாவலவுக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெறுவதாக எதிர்பார்க்கப்பட்ட பேச்சுவார்த்தை நடக்கவில்லை. அரசு வழங்கிய கால அவகாசத்திற்குள் பேச்சுவார்த்தை நடக்குமா என்பது குறித்து எதுவுமே நிச்சயமாகச் சொல்ல முடியாத நிலை இன்று நேற்றுக் காலையில் எழுந்தவரை இருந்தது. பேச்சுவார்த்தை நிச்சயமற்றதாக இருப்பதாலேயே ஆஸ்பத்திரி மூடப்படுமா இல்லையா என்பதும் நிச்சயமற்றதாகி விட்டது. ஆஸ்பத்திரிப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்குவதற்குப் பேராதனியின் இணைத்தையிடுக் ஆஸ்பத்திரி மூடப்படும் என்று அமைச்சர் அத்துலத் வேறு பயமுறுத்தி இருக்கிறார்.

ஆஸ்பத்திரி விவகாரம் இப்போது மிகச் சிக்கலான ஒன்றாகி விட்டது.

யாழ்ப்பாண மக்களுக்கு மகிழ்ச்சியான மக்கள் சகலருக்குமே யாழ் ஆஸ்பத்திரியின் சேவை தேவை. எனவே அதனை மூடுவதற்கு எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது எப்படியாவது அதனைக் காப்பாற்ற வேண்டும்; ஒரே இடத்தில் சரக்கு இல்லை வசதியும் உள்ள - என்பது வருடச் சரித்திரமுள்ள யாழ் ஆஸ்பத்திரியை இழக்க முடியாது. அதுபோல் ஆஸ்பத்திரியை புதிதாக நிர்மாணிப்பது என்பதை நினைத்தும் பார்க்க முடியாது;

அதே வேளை—

வடமாநிலத் தமிழ் மக்களை தனது வழிக்குக் கொண்டு வர அரசாங்கம் மேற்கொண்ட நிர்ப்பந்த நடவடிக்கைகளில் இது மிகக் கடுமையானது. எரிபொருள் தடை, பொருளாதாரத் தடை, தொடர்ந்தும் தடை, நாளைப் புழக்கக் கட்டுப்பாடு என்பனவற்றுக்கு வடக்கு மக்களை அரசினால் உகிய வைக்க முடியவில்லை. ஆஸ்பத்திரி மூடுவிழாவுக்கு வைத்த ஆயுதம் என்று அரசு கணக்குப் போட்டிருக்கலாம். ஆஸ்பத்திரியைச் சாட்டாக வைத்து பொராளிகளையும் மடக்கலாம் என்றும் அது திட்டம் போட்டிருக்கலாம்;

ஆனால் ஆஸ்பத்திரி விவகாரம் பொராளிகளைப் பொறுத்தமட்டில் எதிர்ப்பு நடப்பதற்கு ஒப்பாகும்; அதனாலேயே அவர்கள் பேச்சுவார்த்தையில் வந்து கொள்வது குறித்து கவனமாக இருக்கிறார்கள் என நினைக்கத் தோன்றுகிறது.

எப்படி கொத்தலாவலவை அரசு தனது பிரதிநிதியாக அனுப்பி இருப்பதால், புலிகள் இயக்கத்தினர் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் எல்லாப் படையினரையும் விடுவிப்பது சம்பந்தமாகப் பேசுவதற்கும் அரசினால் பணிக்கப்பட்டிருக்கலாம் அல்லவா?

ஆனால் பொராளிகள் பேச்சுவார்த்தைக்குப் போவதை முற்றாகத் தவிர்க்காமல் அதில் கலந்து கொண்டு மதியூகமாக நடந்து கொண்டால் அரசை வெல்ல வாய்ப்பு ஏற்படலாம்;

எனினும் நேற்று மாலையில் நகரில் திடீரென நடந்த கொடூரமான பொம்மர் ஹெலி தாக்குதல்கள் "அடுத்து அப்பம் தீர்த்தப் பார்க்கும்" அரசின் வழமையான போக்கையே எடுத்துக் காட்டுகிறது.

நம்புறவுடன் பேச்சுக்கு அழைப்பது வேறு. மலர்க்கரமாக பேச வைக்க நினைப்பது வேறு.

எனவே பேச்சை நினைக்க முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாப்பில் ஜனாதிபதி ஆட்சி கொண்டு வருக

இந்திரா காங்கிரஸ் - ஜனதா எம். பிக்கள் கோரிக்கை

சண்டிகார், மே 11

பஞ்சாப் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வரும்படி இந்திய மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டு உள்ளது.

சண்டிகர், ஒழுங்கு நிலை மாநிலத்தில் மோசமடைந்து வருவதைக் கட்டுக்காட்டி பஞ்சாப் மாநில இந்திரா காங்கிரஸ் எம். பிக்களும் ஜனதாக் கட்சியினரும் இக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

சீக்கிய தீவிரவாதிகளுடன் பஞ்சாப் மாநிலத்தில் முக்கிய அமைச்சர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் என்றும் மாநில இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இந்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கும் இது குறித்த கவலை தெரிவித்திருக்கிறார்.

வார இறுதியில் இம் மாநிலத்தில் பதிவுற்ற பொலிஸ்கள். சீக்கிய தீவிரவாதிகளினால் சுடப்பட்டு கொல்லப்பட்டனர். (இ-எ)

ஆஸி. யுத்தக் கப்பல்களுக்கு தடை!

கான்பரா, மே 11

தென் பசிபிக் தீவுகளில் ஒன்றான வனவாட்டு தனது பிரதேசத்தினுள் ஆஸ்திரேலிய யுத்தக் கப்பல்கள், விமானங்கள் பிரவேசிக்கக் கூடாது என்று தடை விதித்துள்ளது.

தென் பசிபிக் தீவுகள் விவகாரங்களுக்கு நெருங்கிய ராஜதந்திர உறவுகளை வளர்த்துக் கொள்வதாக ஆஸ்திரேலிய அரசு விடுத்த குற்றச்சாட்டுக்குப் பதிலாகவே இந்த நடவடிக்கையை வனவாட்டு அரசு எடுத்துள்ளது.

இந்தியாவை வெளியிட்ட வனவாட்டு அரசுப் பிரதம மந்திரி வாக்டர் லீவி, தனது நாட்டினுள் ஆஸ்திரேலியாவின் கனவுச் சேவை நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன என்றும் குற்றம்சாட்டினார். (இ-எ)

பேரூட் சர்வதேச விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது

பேரூட், மே 10

பேரூட் சர்வதேச விமானநிலையம் மீண்டும் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ, முஸ்லிம் பிரிவுகளுக்கு இடையேயான மோதல்கள் காரணமாக 98 தினங்களாக இச்சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டிருந்தது.

திரு. கராமி பிரதமர் பதவியில் இருந்த இராஜினாமாச்செய்த பின்னர் லெபனானில் அரசியல் பதற்றம் குறைந்து வருகிறது. அதனாலே சர்வதேச விமான நிலையம் மீண்டும் போக்குவரத்துக்குத் திறக்கப் படக்கூடியதாக இருந்தது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

சர்வதேச விமான நிலையப் பிரதேசம், முஸ்லிம் கொர்ச்சிக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

போக்குவரத்துக்குத் திறக்கப்பட்ட பின்னர் முதலாவது விமானம் பலவிடங்களுக்கு எகிப்து புறப்பட்டு சைப்பிரஸ் சென்றது (இ-எ)

வளைகுடா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருக

அமெரிக்கா ஈராக்கை கேட்கிறது

வாஷிங்டன், மே 10

வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர நிர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அமெரிக்கா ஈராக்கைக் கேட்டுள்ளது.

பாக்தாதுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமெரிக்க ராஜதந்திர அமைச்சின் கவர் அதிகாரி நிக்சர்ம் மோர்பி இந்த வேண்டுகோளை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனிடம் விடுத்தார்.

இது சம்பந்தமாக அமெரிக்க அதிபர் றேகனிடம் இருந்து கொண்டு வந்த விசேட செய்தி ஒன்றையும் திரு. மோர்பி, ஈராக் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

திரு. நிக்சர்ம் மோர்பி மேற்கு ஆசிய நாடுகளிடையே சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு இருக்கிறார். (இ-எ)

சிம்பாவேயில் 4 வெள்ளையர் சுட்டுக் கொலை

ஹராரே. மே 11

சிம்பாவேயில் 4 வெள்ளையர்கள் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தனிப்பட்ட பகையா? அரசியல் காரணமா? என்பது தெரியவில்லை என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

40 கோடி டாலர் பெறுமதி போதை வஸ்து எரிப்பு!

மெல்பேர்ன், மே 10

40 கோடி டாலர் பெறுமதியான போதை வஸ்துக்கள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன.

போதை வஸ்து கடத்தலுக்கெதிரான இயக்கத்தின் ஒரு கட்டமாக இதனை மெல்பேர்ன் அரசு நடத்தியது.

இதனிடையில் போதை வஸ்துக்கடத்தலில் ஈடுபட்டிருந்த கொலம்பியன் குழு ஒன்றையும் மெல்பேர்ன் அரசு கொலிஸ் அதிகாரிகள் வாரி செய்தனர்.

5 கோடி டாலர் பெறுமதியான போதை வஸ்துக்கள் அப்போது கைப்பற்றப்பட்டன. (இ-எ)

கம்பூச்சியா குறித்து பேச்சு

மாஸ்கோ, மே 11

நாய்லந்து வெளியுறவு அமைச்சர், மாஸ்கோவில் ரஷ்ய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

கம்பூச்சியப் பிரச்சினை குறித்து பேச்சுக்கள் அமைந்தன என்று கூறப்பட்டது. (இ-எ)

தேர்தல்முடிவு வெளிவர ஒரு வாரம்

மணிலா, மே 11

பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றத்திலே இரண்டு சபைகளுக்கும் நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் வெளியாக இன்னும் ஒரு வாரம் செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை பொதுத் தேர்தல் நடைபெற்றது. (இ-எ)

எல்லையில் பாகிஸ்தானியர் சுட்டுக் கொலை

புதுடில்லி மே 11

பஞ்சாப் எல்லைக்கு ஊடுருவல் செய்ய முயற்ற பாகிஸ்தானியர் ஒருவரை, இந்திய எல்லைக் காவல் படையினர் சுட்டுக் கொன்றனர்.

அந்த நபரிடம் இருந்த ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

மதுபான விற்பனை நிலையங்களை தாக்கும் சீக்கியர்

புதுடில்லி, மே 11

சீக்கிய தீவிரவாதிகளினால் பஞ்சாப் பிரதேசிரட், மதுபான விற்பனை நிலைகள் அடிக்கடி தாக்குதல்களுக்கு உள்ளாகின்றன.

சீக்கிய மதம் புகைத்தல், மது அருந்தல் ஆகியவற்றைத் தடைசெய்துள்ளதைத் தொடர்ந்து இத் தாக்குதல்கள் நடைபெறுகின்றன.

இதுபோல காந்தமடைகளைக் கொளுத்தி செயிலும் இடங்கள், சினமாக்கார நிலையங்கள் ஆகியவற்றையும் இவர்கள் தாக்குகின்றனர். சீக்கிய ஆதரவு தங்கள் தனியாகவும் இயக்கம் நடைபெற்றுவருகிறது. (இ)

வெளி உலகில்

பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிலையில் மாற்றம் ஏற்படும்

பேரூட், மே 11

பலஸ்தீன விடுதலை இயக்கம் தனது சர்வதேச தோற்றத்தை மாற்றி அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பலஸ்தீனப் பிரச்சினை குறித்து சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழும்பியுள்ள இந் நகுணத்தில் சர்வதேச அபிப்பிராயத்தை தனக்குச் சாதகமாக்கவே இந்த நடவடிக்கையை பலஸ்தீன விடுதலை இயக்கம் மேற்கொண்டுள்ளதாக ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது.

இந்த கடன்படுக்கைகளில் சர்வதேச ரீதியில் தீவிரவாதச் செயல்களைப் புரிந்த அபுநிதால் பிரிவுக் கையெழுத்திட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

ரீதியில் பயங்கரவாத நடவடிக்கைகளில் இயக்கம் ஈடுபடுவது தடை செய்யப்பட்டது

அதே நேரத்தில் இஸ்ரவேலுக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரப் படுத்துவது என்று பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கடன் சகல தீவிரவாதக் குழுக்களிடையேயும் இரகசிய கடன் படுக்கை ஏற்படக்கூடும் தாகவும் ஆஸ்திரேலிய வானொலி அறிவித்தது

இந்த கடன்படுக்கைகளில் சர்வதேச ரீதியில் தீவிரவாதச் செயல்களைப் புரிந்த அபுநிதால் பிரிவுக் கையெழுத்திட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

இன்றைய நிலையில் செய்யவேண்டியது என்ன?

மொழியில் ஆரம்பித்து இலங்கைப் பிரச்சினையாகி இன்று மரணப் பிரச்சினையாக மாறி யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டிருக்கும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக கலை அரங்கில் ஆயுதங்களை எழுப்புகிறோம்.

"தமிழ் மக்களின் உயிரைக் காப்பாற்றுங்கள்" "உடனடியாக முன்னாருங்கள்" என்று சர்வதேசத்தையும் குறிப்பாக இந்தியாவையும், தமிழகத்தையும் வேண்டி நிற்கிறோம்.

இந்த நேரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கான உடனடி உடனடி உண்டு. அதனை நாம் தாமதமின்றி செய்தாகவேண்டும்.

பங்களாதேஷ் பாகிஸ்தானுடன் நடத்திய கறுத்திரப் போராட்டம் உச்சக்கட்டம் அடைந்த போது முதலில் நீதிபதிகள், கல்விமான்கள், பேராசிரியர்கள், நிர்வாகத் தலைவர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்தார்கள்.

அதேபோலத் தமிழ்ப் பகுதியில் உள்ள நீதிபதிகள், நிர்வாகத் தலைவர்கள், பேராசிரியர்கள், வைத்தியர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் தமது பதவிகளை உடனடியாக ராஜினாமாச் செய்ய வேண்டும்.

சர்வதேசமும் அறியும் பொருட்டு போர்க் கொடி உயர்த்தவேண்டும். அதைத் தொடர்ந்து சகோதரத்திலும் உள்ள அரச ஊழியர்கள் அனைவரும் தமது பதவிகளை ராஜினாமாச்செய்து ஸ்ரீலங்கா அரசின் தொடர்பைத் துண்டித்துவிட்டதாக கடனடியாக உலகறியப் பிரகடனப்படுத்தவேண்டும்.

இதுவே எமது முன் உள்ள உடனடியான கடமை ஆகும்.

ஆசீர்வாதம் ஹென்றி

கல்லூரி முன்னாள் பட்டதாரிகள் உறுப்பினர்

மா, அரிசி போதியளவு விநியோகம்

யாழ்ப்பாணம், மே 11

மா, அரிசி போதியளவு ப நோ. கூ சங்கங்களுக்கு வழங்கப்படுவதாக.

இவற்றிற்கு எவ்வகையான கட்டுப்பாடோ தட்டுப்பாடோ இல்லை என உதவி உணவுக் கட்டுப்பாட்டு நிலாரி திரு. எஸ் பற்குணம் தெரிவித்தார்.

கடந்த புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் காங்கேசன்துறை வளாகத்தில் இருந்து அரிசி, மா எனன ம. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப் பட்டன.

தொடர்ந்து பேரில

அளவு மா, அரிசி வைரிப்பில் உள்ளன.

இல்லாரு திரு. பற்குணம் தெரிவித்தார். (இ-ஈ)

சைவமன்ற அங்குரார்ப்பணக் கூட்டம்

முல்லைவன், மே 11

சைவ சமய வளர்ச்சிக்காக சைவ மன்றங்கள் அமைக்கப்பட வேண்டும் பண்ணிசைப் போட்டி கண்ணும் சைவசமய அறிவுப்பண்ணிசைப் போட்டிகளையும் நடத்துவதாக ஆலய அறங்காவலர் மக்களிடையே சமய அறிவு வளரும்.

முல்லைத்தீவு இந்துவித்தியாலயத்தில் நடந்த முல்லை மாவட்ட சைவ மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார். (இ-93)

ஆலய நாத்தங்களில்

இன்று இரதோற்சவம்

யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய ரதோற்சவ விழா இன்று நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை காலை 9-30 மணிக்கு ஆறுமுகப் பிள்ளை - கணபதி, சுப்பிரமணியர் சமேதம் தேர்த்தேரில் ஆரோகணித்து திருவீதியுலா வரும் காட்சியும் நடைபெறும்.

தேர் இருப்புக்கு வந்த பின்பு பக்தர் சாதி நலச்சாதி அருச்சனையும் நடைபெறும்.

நாளை புதன்கிழமை சித்திரா பூரணை தினத்தில் தீர்த்தோற்சவம் காலை 10 மணிக்கு நடைபெறும். (இ)

வாசகர் திருமுகம்

பட்டுக்குடை திருவிழா

யாழ்ப்பாணம், மே 11

நல்லூர் கலாசார பிரிவினரால் கோயில் பக்தர் குடைத்திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது காலை 10-00 மணிக்கு தீர்த்தமும் அதன் பின் விசேஷமாக பூசையும் மகா அபிஷேகமும் நடைபெறும்.

மாலை 4-30 மணிக்கு அலங்காரக் கண்ணாடி இடம் பெறும். (இ-ஈ)

நெடுங்கேணியில் பதற்றம்

நெடுங்கேணி, மே 11

நெடுங்கேணிப் பகுதியில் நிலவும் ஹெலிக் கொப்டர்கள் தாழப் பறந்து நோட்டமிட்டுச் செல்வதால் மக்கள் பதற்றமான நிலையில் இருக்கின்றனர். (இ-108)

ரமழான் சிந்தனை

மற்றொரு சந்தர்ப்பத்தில் அன்னல் நபி (ஸல்) அவர்களை மனிதனை அமரர் நிலைக்கு உயர்த்தும் விஷயங்களில் கலை இன்னொருவர் துறப்பதையும், நோன்பு நோற்பதையும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் இவ்விதம் கூறினார்கள். நிச்சயமாக அல்லாஹ் தன் அமரர்களை கலை இன்னொருவர் துறந்த இன்னொருவுடன் போட்டியிட வைப்பான். அல்லாஹ் சொன்னான். எனக்காகத் தன் உடல் இச்சையை அடக்கிய இன்னொனே! எனக்கு நீ எவ்வாறாயினும் என் அமரர்களில் ஒருவனாக போகிறே இருக்கின்றாய் என்று கூறினார்கள்.

மௌலவி ஏ ஆர். எம். நஸீர்

விநாயகர் கவிதை

குறள்:

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம் எல்லாப் புகழும் தரும்.

பொருள்:

மனத்தில் நன்மை கலந்து ஆக்கமாகும்; இனத்தில் நன்மை (ஆல்லவோடு நிற்காமல்) எல்லாப் புகழையும் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TOEFL வகுப்புகள்
A/L English Grammar
வகுப்புகள்
சனி, ஞாயிறு காலை 8 மணி — 10 மணி
ஆரம்பம்: 16-5-87
S. B. IYAR
12, வைமன் வீதி, நல்லூர்.

உதயன்

12 : 05 : 1987 செவ்வாய்க்கிழமை

SPOKEN ENGLISH
by
S. B. IYAR
புதிய சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்: 16 - 05 - 87
(4 மணி — 6 மணி)
13, வைமன் வீதி,
நல்லூர்.

தமிழ்நாடு அரசின் ரூ. 8 கோடி உதவி!

காமினியின் கூற்றால்

எழுந்த சர்ச்சை

புதுடில்லி, மே11

இலங்கைத் தமிழருக்கு உதவ தமிழ்நாடு அரசு 8 கோடி ரூபா ஒதுக்கியது பற்றி அமைச்சர் காமினி திசாநாயக்கா விமர்சித்தது இந்தியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

நேற்று புதுடில்லியில் நடந்த ராஜ்ய சபாக் கூட்டத்தில் அ.தி.மு.க எம்.பி. வலம்புரி ஜோன் இப்பிரச்சினையைக் கிளப்பினார்.

இலங்கை அமைச்சர் காமினி திசாநாயக்காவின் கூற்று, ராஜீய நடைமுறைகளை மீறுவதாக உள்ளது அரசு இது விஷயம் குறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டும்- இப்படி வலம்புரி ஜோன் ராஜ்யசபையில் தெரிவித்தார்.

"தமிழ்நாடு அரசு 8 கோடி ரூபா இலங்கைத் தமிழருக்கு உதவ ஒதுக்கியுள்ளது இனவிரோதியான அரசுக்கு தீர்வு காணும் முயற்சிக்கு இடைஞ்சலாக உள்ளது"- இப்படி அமைச்சர் காமினி திஸாநாயக்கா தெரிவித்திருந்தார்.

ஒரு மாதிலத்தின் முதலமைச்சர் செய்யக் கூடிய செயலா இது?- என்றும் அமைச்சர் காமினி திஸாநாயக்கா செய்தியாளர் மத்தியில் பேசையில் கேட்டிருந்தார்.

இதற்கிடையில் அ.தி.மு.க. எம்.பி. திரு; குழந்தைவேலு ராஜ்ய சபையில் இலங்கை அமைச்சர் திஸாநாயக்கா, தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனை அவமதித்து விட்டார். இது இந்தியாவையே அவமதித்த நற்செயலாகும்-

இலங்கைத் தமிழருக்கு உதவுவதற்கு நிதி ஒதுக்கியதற்கு தமிழக முதலமைச்சரை, இலங்கை அமைச்சர் காமினி திஸாநாயக்கா கடுமையான வார்த்தைகளினால் கண்டித்திருக்கின்றார். இதை அனுமதிக்க முடியாது.

இலங்கை அமைச்சரின் கூற்றை எமது கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

ராஜிய சலுகைகளைத் துஷ்பிரயோகம் செய்து இலங்கை அமைச்சர் பேசியிருக்கின்றார்.

இதற்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று கூறினார். (இ-எ)

நீர்வேலியில் இந்துக்கல்லூரி சேதம்

யாழ்ப்பாணம், மே 11

நீர்வேலியில் உள்ள அந்நியார் இந்துக் கல்லூரி மீது ஹெலிகொப்டர் நடத்திய 50 கலிபர் தாக்குதலில் கல்லூரி சேதமடைந்தது.

இந்தக் கல்லூரியில் ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களுக்கான வகுப்புக்கள் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

காலை 11 மணியளவில் வந்த ஹெலிகொப்டர் சுமார் அரை மணி நேரமாக இந்தக் கல்லூரியை நோக்கி தாக்குதல் நடத்தியது.

கல்லூரியில் இருந்த மாணவர்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கி கொண்டதால் காயம் எதுவும் இன்றி தப்பித்துக் கொண்டனர். (இ-7)

குருநாதர் சுவாமி கோவிலடியிலிருந்து

உள்ளூர்--தூரசேவை பஸ்கள்

யாழ்ப்பாணம், மே 11

வடபிராந்திய போக்குவரத்து சபையின் உள்ளூர்; தூரசேவைகள் யாவும் நாளை புதன் இழமை முதல் யாழ் குருநாதர் சுவாமி கோவிலடியில் இருந்து செல்லும்.

கடந்த திங்கட்கிழமை முதல் தூர சேவைகள் நல்லூர் இந்து விடுதி அருகிலும் ஏனைய சேவைகள் குருநாதர் கோவிலடியிலும் செயலாற்றி வருகின்றன.

இரு இடங்களில் இந்த பஸ் நிலையங்கள் செயற்படுவதால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டே இந்த இரு நிலையங்களும் ஒன்றாகப் பயன்படுகின்றன.

யாழ்ப்பாணம் வரும் பொதுமக்களின் நன்மை கருதி (சில தூரதேர சேவைப் பஸ்களும் குருநாதர் கோவிலடி, ஆரியகுளம் ஊடாக யாழ் பஸ் நிலையம் சென்று திரும்பும்.

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்து சபைத் தலைவர் திரு சி. வைரத்தினம் அறிவித்துள்ளார். (இ-7)

கண்ணி வெடியில் 6 கொமாண்டோக்கள் பலி!

யாழ்ப்பாணம், மே 11

நேற்றுக் காலை ஏழாலூர் இராணுவ முகாமில் இருந்து வந்தாறுமூலைக்கு காலநடையாக வந்த கொமாண்டோக்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தியதில் 6 கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர் புலிகள் தரப்பில் இழப்பு எதுவும் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

செயலகம் வழமைபோல் இயங்கியது

யாழ்ப்பாணம், மே 12

யாழ் அரச செயலகம் நேற்று வழமைக்குத் திரும்பியது.

விசேட குழு மீண்டும் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், மே 11

யாழ் மெரியாபதி திரி விசாரணை தொடர்ந்தும் இழுபறி நிலையில் உள்ளது.

விசேஷ குழு ஒன்று மீண்டும் இன்றோ அல்லது நாளையோ இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்த கொழும்பு செல்வதாக அறியவருகிறது.

குழு விசேட விமானம் மூலம் பலாலியில் இருந்து கொழும்பு செல்லும். (இ-10)

பிரிட்டிஷ்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தைக் கலைக்கும் தனது எண்ணத்தை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தைக் கலைக்கும் உத்தரவில் மகாராணியார் கையெழுத்திட்டார்.

திருமதி மார்கரட் தாட்சர் 1979 இல் இருந்து பிரதமராக பணி புரிந்து வருகிறார்.

கருத்துக்கணிப்பெடுப்பின் படி ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 41 சதவீதமான ஆதரவு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-எ)

50 க்கு--.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்தன.

வாகனங்களும் பஸ் நிலையப் பகுதியில் காணப்பட்டன.

நேற்றுக் காலையில் இருந்து மாலை நான்கு மணிவரை ஷெல் தாக்குதல்கள் நடைபெறவில்லை

எனினும் மாலை இடம் பெற்ற ஒன்பது விசிறும் தாக்குதல் மீண்டும் செயலிழந்தது ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. (இ-10)

செஞ்சிலு---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருக்குதவாராக உள்ளோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

காயமடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் (55 வயது) மகேஸ், எம் முகைக் (36வயது) நாகராஜா, வேலாயுதம் (70 வயது) மாவிப்பாய் வீதி, முகம் ஹபரூ (75 வயது) முனிலிம் கல்லூரி வீதி, வீதி, எம். பேனி (31 வயது) கண்டைதீவு. (இ-7-10)

மக்கள் வங்கியில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இக்கொள்ளையை நடத்தினர் என்றும் அவர்கள் ஜே. வி. பி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹைஏஸ் வாகனத்தினர் கைவிடப்பட்டிருந்தமை ஹெலிகொப்டரில் மேற்கொண்ட நடத்திய வாதாரப்புப் படையினர் கண்டு பிடித்தனர். (இ-எ)

இலங்கைக்கு எதிர்காலமே இனிஒருபோதும் கிடையாது

தொடர்ந்து நிதி அமைச்சராக பதவி வகிக்க எண்ணம் இல்லை

கொழும்பு, மே 11

பாதாளப்புச் செலவினம் இந்த வேளத்தில் அதிகரித்துக் கொண்டு போகும் இலங்கைக்கு எதிர்காலமே இடையாது

இச்சூழ்நிலையில் நிதி அமைச்சராக தொடர்ந்து பதவிவகிக்கும் எண்ணம் எனக்குக் கிடையாது.

நிதி அமைச்சர் ரெனி டிமெல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்புச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் மேலும் கொண்டதாவது:

இலங்கையில் நிலவும் அரசியல் நிலைமை குறித்து உலக வங்கி, சர்வதேச நாணயச்சபை ஆகியன மீதுள்ள கவலை கொண்டு உள்ளன.

வெகு விரைவில் இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்று இந்த ஸ்தாபனங்கள் விரும்புகின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கைக்கான உதவிகளை அமெரிக்கா குறைத்து விட்டது.

கடுத்த ஆண்டுதொடக்கம் உதவி கிடைக்க அதிகரிக்கும் படி நாம் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா மறுத்து விட்டது.

வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு, அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினம் தான் பெரும் முட்டுக்கட்டையாக உள்ளது.

இப்படி நிதி அமைச்சர் ரெனி டிமெல் பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

குடாநாட்டைக்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

றது.

தமிழர் அமைப்புக்கள் பேச்சுக்கள் நடத்த முன் வராத பட்சத்தில் மாகாணசபைச் சட்டமூலத்தை அரசு அமுலுக்குக் கொண்டு வரும்.

தமிழ்த் தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிடச் பொருளாதாரத்தடை முதலிய வற்றை அரசு அகற்றி விடும்.

யாழ் ஆஸ்பத்திரியை மூடி விடுவது என்ற முடிவை அரசு இடை நிறுத்தி வைத்துள்ளது.

யாழ் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க அரசு இப்படித் தீர்மானித்துள்ளது

அமைச்சர் காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அச்சுவேலியில்...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

கூடம் முற்றாகச் சேதமடைந்தது

அச்சுவேலி - வல்லை ரோடில் உள்ள ஆசிரியை திருமதி வேதநாயகம் வீட்டில் விழுந்த ஷெல்லினால் வீட்டின் கூரை இடிந்தது ஷெல் துண்டுகள் படுக்கை அறைக்குள் விழுந்தன. ஆசிரியையின் இரண்டு பிள்ளைகள் காயம் அடைந்தனர். அவரின் குடும்பம் மயிரிழையில் உயிர் தப்பியது.

மேனகா (வயது 3) கிரிசாளினி (வயது 5) ஆகிய குழந்தைகள் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அச்சுவேலி நகரிலிருந்து பாலபத்தருக்கு அருகில் உள்ள புரட்டஸ்தாந்த தேவாலய வளாகத்தில் விழுந்த ஷெல்லினால் தேவாலய கவர்கள் சேதப்படுத்தப் பட்டன. மரங்கள் முறிந்தெறியப்பட்டன.

அச்சுவேலி மகாவித்தியாலயத்துக்கு கிழக்குப் பக்கத்தில் உள்ள வீடு ஒன்றில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீடு சேதமடைந்தது. மதில், மரங்கள் சேதப்படுத்தப்பட்டன. இந்த வீட்டில் அகதிகளாக இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அச்சுவேலி தெற்கு சின்னத்தம்பி கணேசன் என்பவரின் வீட்டில் விழுந்து வெடித்த ஷெல்லின் துண்டு ஒன்று அச்சுவேலி தெற்கில் உள்ள பல வீடுகளின் கூரைக் சேதமாகின.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை பிரப்பந்தி ஆகிய இடங்களிலும் ஷெல் விழுந்து வெடித்தது.

நல்லூரில் பல ஷெல்கள் ஒன்றன்பின் ஒன்றாக விழுந்த வெடித்தபோது பொதுமக்கள் பீதியடைந்தநிலையில் காணப்பட்டனர். (இ-11)

யாழ் நகரில்...

(1 - பக்கத் தொடர்ச்சி)

சாரப்பரானது. இந்த வீதியில் 'டீன்ஸ்' கடைக்கு முன்னால் நின்ற கொறி ஒன்றும் விமானத் தாக்குதலினால் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த தாக்குதல்களில் முனிலிம் வெண் உட்பட ஐந்துபேர் காயமடைந்தனர்.

நாவலர் வீதியில்

நாவலர் வீதியில் உள்ள கடைகளிற் சுவாமி வீதியிலும் இரண்டு வீடுகள் மீது குண்டுகள் வீசப்பட்டன. ஒன்று மாடி வீடாகும்.

ஆனைப்பந்தியில்

ஆனைப்பந்தி மடிவீதி பருத்தித்துறை வீதி நாலாம் ஒழுங்கைகளும் குண்டுகள் விழுந்ததன் காரணமாக அங்கு இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

ஆனைப்பந்தி கலர் கல்லூரிக்கு முன்பாக உள்ள சண்முகநாதன் என்பவருடைய வீட்டு முற்றத்தில் பொம்மர் தாக்குதலின் போது பாரிய குழிகள் காணப்பட்டன.

சண்முகநாதன் குடும்பம் பதுங்கு குழியில் இருந்த படியால் அவர்களுக்கு எதுவும் நடக்கவில்லை.

வீட்டின் முகப்புக்கள் மிகுதி சேதமாகியதுடன் வீட்டின் முற்றத்தில் நின்ற காரின் கண்ணாடிகள் உடைந்த நிலையில் காணப்பட்டன

ஹெலிதாக்குதல்

குண்டு வீச்சு நடந்த சம வேளையில் மத்தியில் ஹெலிகொப்டரில் இருந்தும் 50 கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

50 கலிபர் தாக்குதல்களினால் பிறவுன்வீதியில் சில வீடுகளும், நாவிப்பாய் வீதியில் சில வீடுகளும் சேதமடைந்தன

விமானத் தாக்குதல் நடந்த அதே வேளை கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

கொக்குவில், நவாலி கற்றோர்ப் பகுதி புத்தூர் குளம் ஆகிய பகுதிகளில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இந்த தாக்குதல்களினால் மிக்சார வயர்கள், தொலைபேசி வயர்கள் பல இடங்களில் அறுந்தன.

காயமடைந்தவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலினால் சேதமடைந்த வீடுகளில் இருந்தோர் அருகில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். (அ-10-7-148)

பிரயாண ஒழுங்குகள்
குவைத்

கீழே கண்ட வெற்றிடங்கள் உள்ள பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர். 15-5-87க்குப் பிற்பாடு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

LABOUR	36KD
CARPENTER	45KD
STEEL WORKER	42KD
MASON	42KD
HEAVY EQUIPMENT OPERATER	
TRENCHER	60KD
MOBILE CRANE	
DOZER	
SCRAPER	
FORK LIFT	
GENERATOR	
MOTOR GRADER	
PAY LOADER	
FRONT END	
HEAVY DUTY DRIVER	54 KD
COOK	48 KD
ASST. COOK	48 KD
MECHANICS	48 KD
SURVEYER	90 KD
PLUMBER	48 KD
ELECTRICIAN	48 KD
MECHANICS	48 KD

இலவச சாப்பாடு இலவச தங்குமிடவசதி.

15-05-87 இறுதி நாளாகவுமாகும் குறிப்பிடப்பட்டவை வெற்றிடங்கள் இருப்பதாலும் விரும்புவோர் முந்திக் கொள்ளவும்.

மேற் குறிப்பிட்ட முகவர் நிலையத்தினூடாக முன்னர் பயணம் செய்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

மு/குறிப்பு: அபுதாபி / துபாய் இதற்கு முன்னர் கடவுச் சீட்டு (PASS PORT) கொடுத்தவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

கொழும்பு முகவரி:

CONSTRUCTION & DEVELOPMENT COMPANY LTD.

87, S. De S. Jeyasingha Mawatthe,
NUGEGODA.

ஏகப்பிரதிநிதி:

V.P. பாலா (V.P.பாலசுப்பிரமணியம்)
C/o N. V. பொன்னுத்துரை,
பாடசாலை ஒழுங்கை, கொண்டாவில் மேற்கு
கொண்டாவில். (1224)

Labour Licence No. 96

JAFFNA COLLEGE
INSTITUTE OF TECHNOLOGY
Vaddukoddai

கல்வி ஆண்டு 87/88

புதிய வகுப்புகள் 1-7-87 இல் ஆரம்பமாகின்றன

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி 31-5-87

Diploma Course (1 வருடம்)
I Computer Programming and Data Processing

கொம்பியூட்டர் மயிற்றிறன் தரவு நெறிப்படுத்தலும்

Module I. Basic கட்டணம் ரூபா 1000/-
Module II. Cobol கட்டணம் ரூபா 1000/-

கணிதபாடத்தில் திறமை சித்தியுடன் G C E. (சா.) பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

31 வயதிற்குட்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப்படிவம் ரூபா 5/- காரியாலயத்தில் பெற்று 31-5-87க்கு முன் விண்ணப்பிக்கவும்.

— Director

Jaffna College
Institute of Technology
Vaddukoddai

DIPLOMA IN DRAUGHTSMANSHIP (Civil)

புதிய கல்வி ஆண்டு 87/88 வகுப்புகள் 1-7-87 இல் ஆரம்பமாகின்றன

விண்ணப்பங்கள் 31-5-87 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

G C E (O/L) பரீட்சையில் கணிதபாடத்தில் திறமைச் சித்தியுடன் குறைந்த ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

31 வயதிற்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பப்படிவம் ரூபா 5/- காரியாலயத்தில் பெற்று 31-5-87க்கு முன் விண்ணப்பிக்கவும்.

—பணிப்பாளர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மிக்சார நிலைய வீதி; இரண்டாம் ஒழுங்கை 15, ஆத் இலக்கத்தில் உள்ள உதயன் லிமிடெட் (பிறைவேட்) லிமிடெட் அச்சகத்தில் அச்சிடு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 12 - 05 - 1987 தொலைபேசி இல. 24808, 22078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number [illegible] Telephone 24808, 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org